**செ.வெ.எண்-46** **நாள்-28.11.2018**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்து வங்கிகளுக்கான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (28.11.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், நபார்டின் செறிவு சார் கடன் திட்ட அறிக்கையினை (Potential Linked) மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்டு, தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்திற்கு 2019-20-ம் ஆண்டுக்கான வளம் சார்ந்த கடன் நபார்டு வங்கி திட்ட மதிப்பீடு ரூ.2641 கோடி முன்னுரிமை வங்கிக் கடன்களாக வழங்க வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கிறது.

மாவட்டத்தில் தற்போது உள்ள அடிப்படை கட்டமைப்பு வசதிகள் விரிவாக்க சேவை மையங்களின் செயல்பாடு, பெருகிவரும் தொழில்நுட்ப பரிமாற்றம், வங்கிகளின் நிதி ஆதாரம் ஆகியவற்றை ஆதாரமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் நபார்டு செறிவு சார் கடன் திட்ட அறிக்கையை ஒரு புத்தகமாக வெளியிடுகிறது. அந்த வகையில் அடுத்த ஆண்டு வேளாண் துறைக்கு ரூ.2344 கோடி, சிறு,குறு தொழில்களுக்கு ரூ.58 கோடி, இதர முன்னுரிமை கடன்களுக்கு ரூ.239 கோடி என வாய்ப்புகள் இருப்பதாக அது விவரிக்கிறது.

இந்த திட்ட அறிக்கை மாவட்டத்தின் வளமையை மட்டுமே முன் நிறுத்தி தயாராக்கப்படுகிறது. எனவே மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளும் இந்த திட்ட அறிக்கையை பின் புலமாக கொண்டு அடுத்த ஆண்டுக்கான அவர்களது கடன் திட்டங்களை தயாரிக்கும் மாவட்டத்தின் முன்னோடி வங்கியான பாரத ஸ்டேட் பாங்கு அந்த திட்டங்களை ஒழுங்கு முறைபடுத்தி மாவட்ட கடன் திட்டமாக (District Credit Plan) தயாரித்து பின்னர் வெளியிடப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் செறிவு சார் கடன் திட்ட அறிக்கைகளை தயாரித்து அவைகளை ஒன்றிணைந்து மாநில திட்டமாக்கி, மாநில அரசு மற்றும் மாநில அளவில் உயர்வங்கி அதிகாரிகளோடு ஆலோசனை கூட்டம் நபார்டு சார்பில் நடத்துவதால், வங்கி கடன்கள் அதிகரிப்புக்கு தடையாக இருக்கும் இடர்பாடுகள் விரிவாக விவாதிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது.

மேலும், சொட்டு நீர் பாசனம், தரிசு நில மேம்பாடு, பழப்பயிர் பண்ணைகள், மீன் வளர்ப்பு, ஊரக கிடங்குகள், கூட்டு பொறுப்புகள், குழுக்கள் அமைத்தல் போன்ற கடன் திட்டங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) (பொறுப்பு) திருமதி.லலிதா, மாவட்ட வளர்ச்சி மேலாளர் (நபார்டு) திரு.நவீன்குமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.இளஞ்சேரன், அரியலூர் ரிசர்வ் வங்கி மேலாளர் திரு.பாலாஜி மற்றும் வங்கி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**